**ஹொரண பிரதேச சபை 2022**

--------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹொரண பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

1.6.1 **உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| **உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்த மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்கான அரசாங்கத்தின் மூலதன மானியங்களில் உரிய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட அளவுக்கு சமமான அளவு அதாவது ரூபா 4,705,208 மீளாய்வாண்டிற்கான விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கையளித்தலாக கணக்கீடு | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரியாகத் தயாரிக்கப்படும். | அரசாங்கத்தின் மூலதன மானியம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்ய வேண்டிய போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 2,672,330 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2020 சனவரி 01 ஆம் திகதி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5,750,000 ஆன கம்பெக்டர் வண்டியின் பெறுமதி ரூபா 12,422,650 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 900,000 ஆன முற்சக்கர வண்டி மற்றும் கிரயம் ரூபா 308,000 ஆன டேலர் என்பன சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி - | நிலையான சொத்துக்கள் சரியான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் அடிப்படையில் அகற்றப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 1,049,146 ஆன நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் போருவதண்ட ஆயர் வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தருக்காக உத்தியோகபூர்வ அறையொன்றை அமைப்பதற்காக ஒப்பந்தகாரரருடன் உடன்படிக்கை செய்திருந்தது மாத்திரம் ஆக இருந்த போதும் அதற்காக ரூபா 275,000 கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு அப்பெறுமதி சொத்தாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்களுக் காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்காதிருத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158(அ) பிரிவு | ஆதனவரி உரிமையாளர்கள் 3,029 இல் 01-10 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய நிலுவை தொடர்பாக இறுதி நடவடிக்கையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | ஊழியர்களின் பயிற்சித் தேவையினை இனங்கண்டு மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக அந்தத் தவறை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 திசம்பர் 31 ஆம் திகதிய நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டி | காணி மற்றும் கட்டிடங்கள் தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரை வரவழைத்து மதிப்பீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | காணி மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கட்டிட மதிப்பீடு 2019 ஆம் ஆண்டின் போது வருமான பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணி மற்றும் கட்டிடங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மதிப்பீடு செய்து கொள்ளல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 135,849,195 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 108,625,098 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 18,152,892 | 18,036,889 | 31,987,194 | 8,457,587 | 11,599,001 | 18,073,742 | 23,509,376 | 7,759,879 |
| (ii) | வாடகை | 2,291,600 | 2,002,040 | 2,276,540 | 20,500 | 3,617,100 | 1,976,740 | 3,838,362 | 82,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,761,000 | 1,297,879 | 2,552,803 | 34,000 | 2,763,100 | 1,661,100 | 2,092,343 | 171,921 |
| (iv) | ஏனைய வருமானம் | 172,829,537 | - | 170,939,034 | - | 120,444,398 | - | 108,792,183 | - |
| | மொத்தம் | 196,035,029 | 21,336,808 | 207,755,571 | 8,512,087 | 138,423,599 | 21,711,582 | 138,232,264 | 8,014,300 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01-03 வருட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற 1,479 ஆதனவரி அலகுகளில் இருந்து ரூபா 3,403,957 தொகையும், 03-05 வருடங்களுக்கிடையே 1,042 அலகுகளில் இருந்து ரூபா 3,259,491 தொகையும், 05-10 வருடங்களுக்கிடையே 439 அலகுகளில் இருந்து ரூபா 1,113,624 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 79 அலகுகளில் இருந்து ரூபா 244,552 தொகையும் நிலுவையாகக் காணப்பட்டது. | ஆதனங்களை தடைசெய்யும் செயற்பாடுகளின் கீழ் 05 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் மேற்பட்டு நிலுவையாகக் காணப்படுகின்ற ஆதனங்களுக்காக தடை அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 31,122,097 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 180,016,955 ஆகவும் | மீண்டும் அறவிட முடியாத நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 16,122,097 இனை பதிவழிக்க வேண்டும். தற்போது ரூபா 118,106,387 முத்திரைக் கட்டணம் சபைக்கு கிடைத்துள்ளதுடன் | உரிய பட்டோலைகளை விரைவாகத் தயாரித்து பெறவேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. | ஏனைய நிலுவைப் பணத்திற்குரிய பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 33 மயான நிலங்கள் சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் அவற்றைப் பாதுகாப்பதற்காக எல்லை வேலியும் அமைக்கப் பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களை கையேற்றல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதுவரை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையினால் அதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பணத்தை ஈடுபடுத்த முடியாயிருந்தது. | மயான நிலங்களை சபைக்கு கையயேற்று எல்லை வேலியை அமைத்தல் வேண்டும். |
| (ஆ) 2020 மற்றும் 2021 இன் வருமான அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய 09 வாகனங்கள் 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த சட்டரீதியான தேவையினைப் பூர்த்தி செய்யாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | 04 வாகனங்களுக்காக தற்போது வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. மிகுதி 05 வாகனங்களுக்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல வாகனங்களுக்காகவு ம் வருமான அனுமதிப் பத்திரத்தைப் பெற்று ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) 2020 திசம்பர் 09 ஆம் திகதிய 08/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்ட நிலைமையில் காணப்படாத பழுதுபார்த்தல் பயனுள்ளதான வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டியிருந்த போதிலும் பொக்குணுவிட்ட உப அலுவலகத்திலுள்ள 02 டெக்டர் வண்டிகளை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வுாகனங்களைப் பரீட்சித்து பழுதுபார்ப்பதற்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல வேண்டும். |